# ரமலான் சந்தையில்
# 82 வியாபாரிகளுக்கு சம்மன்



கோலாலம்பூர், ஏப். 3-
சுத்தமான முறையில் உணவுகளை விற்பனை செய்யாத குற்றத்திற்காக ரமலான் சந்தையில் வியாபாரம் செய்து வந்த 82 வியாபாரிகளுக்கு கோலாலம்பூர் மாநகர் மன்றம் சம்மன்களை சார்வு செய்தது.

தலைநகரைச் சுற்றியுள்ள ரமலான் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட இந்த சோதனையின்போது 2,404 வியாபாரிகளின் கடைகளில் சோதனை மேற்கொள்ளப்பட்டதாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் கூறியது.

கடந்த மார்ச் 29ஆம் தேதி வரை உணவு தரப் பிரிவு 1,060 உணவுகளின் மாதிரிகளை எடுத்து உணவு பாதுகாப்பு ஆய்வு மையத்திற்கு அனுப்பி வைத்தது. அப்போது அதில் 11.9 விழுக்காடு உணவுகள் வீணாகி போயிருந்ததோடு, கிருமிகளைக் கொண்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாக அந்த அறிக்கை கூறியது.

சுத்தமான முறையில் உணவுகளை தயாரிக்காதது, சரியான முறையில் சமைக்காதது, சமையல்காரர்கள் சுத்தமில்லாமல் இருந்தது ஆகிய காரணங்களும் இதில் உள்ளடங்கும்.

உணவுகள் அசுத்தமாக இருந்த அதேவேளையில், அது வேறு பொருட்களை கலந்திருந்ததால் 1979ஆம் ஆண்டு உணவுகளைக் கையாளும் சட்டத்தின் 6(1) பிரிவின் கீழ் அவர்களுக்கு சம்மன் சார்வு செய்யப்பட்டதாக அது கூறியது.

கடைகளிலுள்ள பணியாளர்கள் தடுப்பூசி போட்டுக் கொள்ளாதது ஆகிய குற்றங்களும் இதில் உள்ளடங்கும்.

அதேவேளையில், விற்பனை செய்யப்படும் உணவுகள் சுத்தமான இடத்தில் வைக்கப்பட வேண்டும். அவை ஒருபோதும் தரையிலும் சாலைகளிலும் வைக்கப்படக் கூடாது எனவும் வியாபாரிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக அந்த அறிக்கை கூறியது.